# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

## අති විශෙෂ

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

## அதி விசேஷமானது

**අංක 12,083 — 1960 මාර්තු 12 වැනි සෙනසුරාද — 12.3.1960**

12,083 ம் இலக்கம் — 1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 12 ந் திகதி சனிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I)—பொது

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளது.]

### அரசாங்க அறிவித்தல்கள்

**1955 ம் ஆண்டின் 7 ம் இலக்கச் சட்டத்தாலும், 1957 ம் ஆண்டின் 30 ம் இலக்கச் சட்டத்தாலும் திருத்தியமைக்கப்பட்ட 1947 ம் ஆண்டின் 30 ம் இலக்க உணவு வழங்கல் சட்டம்**

4 (2) ம் பிரிவின் கீழுள்ள கட்டளை

1947 ம் ஆண்டின் 30 ம் இலக்க உணவு வழங்கல் சட்டத்தின் 4 (2) ம் பிரிவின் பிரகாரம் விஜயானந்த தகநாயக்க, பாதுகாப்பு வெளிவிவகார அமைச்சர் ஆகிய யான் இக்கட்டளையால் 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ந் திகதியைக் கொண்ட 12,046 ம் இலக்க இலங்கை அதிவிசேட அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 28 ந் திகதி திருத்திப் பிரசுரித்த சொல்லப்பட்ட சட்டத்தின் அட்டவணையை " ஈரவெண்காயம் ", " அரிசி " என்பவற்றைச் சேர்த்து பின்வருமாறு வாசிக்கப்படத் திருத்தியமைக்கிறேன்.

அட்டவணை

நெல்
அரிசி
கோதுமை
கோதுமை மா
சீனி
இந்திய மக்கள் குடியரசிலிருந்து உற்பத்தி செய்யப்பட்டு அனுப்பப்படும் பணங்கற்கண்டைத் தவிர்ந்த கற்கண்டு
இந்திய மக்கள் குடியரசிலிருந்தும் பாக்கிஸ்தானிலிருந்தும் உற்பத்தி செய்யப்பட்டு அனுப்பப்படும் கருப்பட்டியைத் தவிர்ந்த கருப்பட்டி
ஈரவெண்காயம்

விஜயானந்த தகநாயக்க,
பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சர்.

பாதுகாப்பு, வெளிவிவகார அமைச்சின் காரியாலயம்,
(உணவு, சந்தைப்படுத்தல், கூட்டுறவுப் பிரிவு),
330, யூனியன் பிளேஸ், கொழும்பு 2,
1960 ம் ஆண்டு மார்ச்சு மாதம் 11 ந் திகதி.